பதிப்புரிமை ஆசிரியருக்கே /All Rights to Author புதிய பாடத்திட்டம் / New Syllabus

NEW GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரி வினாத்தாள், 2020 ஓகஸ்ற்
General Cerificate of Education (Adv. Level) Model Paper, August 2020

புவியியல் II
Geography II

22 T II

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடையெழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

MODEL PAPER 3
மாதிரி வினாத்தாள்


**அறிவுறுத்தல்கள்:** சுட்டெண்: ..................................................

✸ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

**பகுதி I - பௌதிகப் புவியியல்**

**1.** (i) **‘தொகுதி’** என்பதை வரையறை செய்வதுடன், அதன் **பிரதான** வகைகளையும் அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(ii) கீழே வரிப்படத்தில் **A, B, C** மற்றும் **D** என அடையாளப்படுத்தப்பட்டுள்ள புவித் தொகுதியின் **பிரதான** உப தொகுதிகளைச் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக. **(02** புள்ளிகள்)




(iii) மேலே **வினா (ii)** இல் உம்மால் அடையாளம் காணப்பட்ட பிரதான உப தொகுதிகளில் யாதாயினும் **ஒன்றைத்** தெரிந்தெடுத்து, அதன் இயல்புகளையும் முக்கியத்துவத்தினையும் விவரிக்குக. **(06** புள்ளிகள்)

(iv) தொகுதி **D** இல் அமைவுபெற்றுள்ள சூழற்தொகுதி ஒன்றில், உயிருள்ள கூறுகளுக்கும் - உயிரற்ற கூறுகளுக்கும் இடையிலான இடைத்தாக்கங்களை விரிவாக ஆராய்க. **(09** புள்ளிகள்)

**2.** (i) மண் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் **மூன்று** காரணிகளை அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(ii) பாறைகளிலிருந்து மண் உருவாகும் செயன்முறையினை வரைபட ரீதியாக விளக்குக. **(04** புள்ளிகள்)

(iii) நாடுகளின் அபிவிருத்தியில் பாறைகள் பெறும் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. **(05** புள்ளிகள்)

(iv) பாறைகளின் அகழ்வு நடவடிக்கை காரணமாக ஏற்படுகின்ற, **இரண்டு** பௌதிகப் பாதிப்புக்களையும், **இரண்டு** மானிடப் பாதிப்புக்களையும் உதாரணம் தந்து பரிசீலிக்குக. **(08**புள்ளிகள்)

**3.** (i) வரண்ட பிரதேசங்களில் காற்றினால் மண் கொண்டு செல்லப்படும் **மூன்று** முறைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (**03** புள்ளிகள்)


(ii) வரண்ட பிரதேசங்களில் காணப்படும் **மூன்று** தின்னல் நிலவுருவங்களை வரைபட உதவியுடன் ஆராய்க. (**06** புள்ளிகள்)

(iii) வரண்ட பிரதேசங்களில் காணப்படும் **மூன்று** படிதல் நிலவுருவங்களை வரைபட உதவியுடன் ஆராய்க. (**06** புள்ளிகள்)

(iv) “காலநிலைக் காரணிகளுக்கு ஏற்ப தாவரங்களும் விலங்குகளும் தம்மை இசைவாக்கப்படுத்திக் கொள்கின்றன” – உயர் அகலக்கோட்டுப் பிரதேசத்தில் உள்ள உயிர்த்திணிவையும், பாலைநில உயிர்த்திணிவையும் அடிப்படையாகக் கொண்டு இக் கூற்றினை மதிப்பிடுக. (**05** புள்ளிகள்)

**4.** (i) முனைவு **தவிர்ந்த** உலகின் பிரதான உயிரினக் கூட்டங்களை அடையாளம் செய்க. (**03** புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் **A – D** வரையான ஆங்கில எழுத்துக்களால், உலகின் பிரதான இடைவெப்ப உயிரினக் கூட்டமொன்று நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றின் பரம்பலைச் **சரியாக** இனங் கண்டு பெயரிடுக. (**02** புள்ளிகள்)





(iii) மேலே **வினா (ii)** இல் உம்மால் அடையாளங் காணப்பட்ட உயிரினக் கூட்டத்தைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விவரிக்குக.
(அ) காலநிலைக் காரணிகள் (ஆ) இயற்கைத் தாவரம் (**06** புள்ளிகள்)

(iv) உலகின் உயிர்த் திணிவுகள் எதிர்நோக்கிவரும் **நான்கு** பிரதான சவால்களைத் தகுந்த உதாரணங்களுடன் பரிசீலிக்குக. (**09** புள்ளிகள்)

## பகுதி II – மானிடப் புவியியல்

**5.** (i) கீழே **A, B** எனப் பெயரிடப்பட்டுள்ள சனத்தொகை நிலைமாறு காலகட்டத் தன்மைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டமைப்புக்களைச் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக. (**02** புள்ளிகள்)




(ii) **A மற்றும் B** ஆகிய கட்டமைப்புகளில் அவதானிக்கத்தக்க குடிப்புள்ளியியல் காரணிகள், **இரு** கட்டமைப்புகளிலும் வேறுபட்டு அமைவதற்குப் பொறுப்பான காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. (**04** புள்ளிகள்)

(iii) கட்டமைப்பு **C** இல் உள்ளவாறு, சில அபிவிருத்தியடைந்த நாடுகளின் குடித்தொகைக் கூம்பின் வடிவம் நுனிப்பக்கமாக அகன்றுள்ளது. இதனால் குறித்த நாடுகள் எதிர்நோக்கும் **மூன்று** சவால்களை பொருத்தமான உதாரணங்கள் தந்து ஆராய்க. **(06** புள்ளிகள்**)**

(iv) இலங்கையின் சனத்தொகைப் பரம்பல் **மற்றும்** அடர்த்தி என்பவற்றில் இனங்காணத்தக்க முனைப்பான **நான்கு** பண்புகளைச் சுருக்கமாக ஆராய்க. **(08** புள்ளிகள்**)**

**6.** (i) கிராமக் குடியிருப்பின் **இரண்டு** வகைகளை அடையாளம் செய்க. **(02** புள்ளிகள்**)**

(ii) பின்வரும் துறைகளின் கீழ் கிராமந்தரக் (கிராம நகர) குடியிருப்புகளை விவரிப்பதுடன், அதற்குப் பொறுப்பான காரணிகளையும் உதாரணம் தந்து விளக்குக.

(அ) குடிப்புள்ளியியற் பண்புகள்

(ஆ) தொழிற் கட்டமைப்பு

(ஆ) நிலப் பயன்பாட்டுப் பாங்கு **(06** புள்ளிகள்**)**

(iii) இலங்கையின் தலைநகர்ப் பிரதேசத்தில் நகரக் குடியிருப்புகளின் செறிவிற்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளை உதாரணம் தந்து விளக்குக. **(06** புள்ளிகள்**)**

(iv) இலங்கையின் நகரமயமாக்கம் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து எவ்வாறான தன்மையைக் கொண்டுள்ளது என்பதனை விமர்சன ரீதியாக விளக்குக. **(06** புள்ளிகள்**)**

**7.** (i) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில்,

(அ) காரியம்

(ஆ) இரத்தினக்கல்

(இ) அப்பதைட்

(ஈ) இரும்பு

முதலான கனிமங்கள் பரந்துள்ள தலா **ஒவ்வொரு** இடங்களைச் **சரியாகக்** குறித்துப் பெயரிடுக. **(02** புள்ளிகள்**)**

(ii) இலங்கையில் காரியப் படிவுகளின் பரம்பல் **மற்றும்** பயன்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. **(04** புள்ளிகள்**)**

(iii) இலங்கையின் காரிய உற்பத்தி தொடர்பான அண்மைக்காலப் போக்குகளைச் சுருக்கமாக விவரிக்குக. **(05** புள்ளிகள்**)**

(iv) இலங்கையில் கனியங்கள் மூலம் பெறப்படுகின்ற,

(அ) தொழில்வாய்ப்புகள்

(ஆ) பிரதேச அபிவிருத்தி

(அ) தேசிய வருமானத்தின் பங்களிப்பு என்ற அடிப்படையில் வகைக்கு **இரு** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. **(09** புள்ளிகள்**)**

**8.** (i) **'பிராந்தியம்'** எனும் பதத்தைத் தெளிவுறுத்துக. **(02** புள்ளிகள்**)**

(ii) பிராந்திய அமைப்புகளின் செயற்பாடுகள் கோளமயமாதலின் விருத்திக்குத் துணைபுரியுமாற்றலை உதாரணம் தந்து விவரிக்குக. **(06** புள்ளிகள்**)**

(iii) சர்வதேச ரீதியாகச் செயற்பட்டுவரும் **இரண்டு** சூழல் அமைப்புகளையும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இயங்கிவரும் **இரண்டு** பிராந்திய அமைப்புகளையும் அடையாளம் செய்க. **(04** புள்ளிகள்**)**

(iv) மேலே **வினா (ii)** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்ட சூழல் அமைப்பு ஒன்றினைத் தெரிந்தெடுத்து, அதனைப் பின்வரும் விடயத் தலைப்புக்களின் கீழ் விவரிக்குக.

(அ) பின்னணி

(ஆ) பணிகள்

(இ) இலங்கையின் பங்களிப்பு **(08** புள்ளிகள்**)**

* * *

**வினா இல:**
**07 (i)**



A.Kajan - ...jan